DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -19

| | | |
|---|---|---|
| Name | : குமார் | Caste: |
| Father's / Husband Name: | | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 7th day of January 2025.

A1 and A3 to A6 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது புலிகுத்திதெரு, சேலத்தில் வசித்து வருகிறேன். நான் கேபிள் ஆப்ரேட்டர் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. ஆனந்தன் என்பவரை எனக்கு தெரியாது. அவரது தாயாரை தான் எனக்கு தெரியும். ஆனந்தனின் தாயார் துணி தேய்த்து கொடுக்கும் தொழில் செய்கிறார். அதனால் எனக்கு தெரியும். ஆனந்தனின் அம்மா செலவுக்கு பணம் தேவை என்றால் என்னிடம் வாங்குவார். பின்னர் திருப்பி கொடுத்துவிடுவார்.

நான் ஆனந்தின் அம்மாவிற்கு ரூ.10000/- கொடுத்தேன். அதுபற்றி தான் நான் போலிசாரிடம் சொன்னேன். ஆனந்தனின் அம்மா அந்த பணத்தை ஒரு மாதத்தில் திரும்ப கொடுத்துவிட்டார். போலிசார் அதன் பின்பு தான் வந்து விசாரித்தார்கள். என்னிடம் இருந்து போலிசார் ரூ.10000/- வாங்கி சென்றார்கள். போலிசார் என்னிடம் பணம் வாங்கிய போது நான் கையெழுத்து போட்டுகொடுத்தேன்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிசார் விசாரணையில் ஆனந்தனையும் அவரது அம்மாவையும் எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல ஆனந்தை தெரியாது என்று தான் சொல்லியுள்ளேன். ஆனந்தன் கொடுத்ததாக சொல்லிதான் ஆனந்தின் தாயார் பணத்தைஎன்னிடம் திரும்ப கொடுத்தார் என்றால் சரியல்ல. போலிசார் ஆனந்தன் கொலை செய்து அதற்கு கூலியாக வாங்கி வந்த பணத்தை அவரது அம்மாவிடம் கொடுத்து என்னிடம் கொடுத்தார் என்றும், அதை வாங்கியதால் தான் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல.

போலிசாரிடம் நான் பணத்தை கொடுத்த போது கிராமநிர்வாக அதிகாரியும், அவரது உதவியாளரும் வந்திருந்தார்கள் என்றால் சரியல்ல. பணத்தை கிராமநிர்வாக அதிகாரி மற்றும் அவரது உதவியாளர் முன்பு போலிசார் கைப்பற்றியதற்கு போலிசார் மகஜர் தயார் செய்தார் என்றால் போலிசார் என்னை ஆட்டையாம்பட்டி காவல்நிலையம் வரச்சொன்னார்கள் நான் அங்கு போய் தான் பணத்தை கொடுத்தேன்.

போலிசார் விசாரணையில் உண்மை சங்கதிகளை சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

_எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- L. Kalaivani,
III Additional District Judge,
Salem.